[1987 மே 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் .:''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற் றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) சட்ட முன்வடிவின் மீதான ஆய்வு தள்ளி வைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

பேரவையின் முன் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1987-ம், சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1987-ம் ஒத்திவைக்கப்பெற்று நாளை எடுத்துக்கொள்ளப்படும்.